# பின்னணித் தகவல்கள்

Ontario

**அட்டர்னி ஜெனரல்**
**அமைச்சகம்**

15 நவம்பர், 2006

**மனித உரிமைகள் அமைப்பை மேலும் வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்கள்**

2006 ஏப்ரலில் அறிமுகம் செய்யப்பட்ட மனித உரிமைகள் சட்ட திருத்தச் சட்டம் 2006இன் (Human Rights Code Amendment Act) சட்ட வரைவு 107ஐ மேம்படுத்த மெக்கின்ட்டி அரசு உத்தேசித்துள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்படுமானால், 40 ஆண்டுகால பழமையான ஒன்டாரியோவின் மனித உரிமைகள் அமைப்பை நவீனப்படுத்தும், மேலும் வலுப்படுத்தும்; இதனால் பாகுபாடுகளைத் தடுப்பதில் முனைப்புக் காட்டும் அதே நேரத்தில் புகார்களை விரைவாகவும் மேலும் திறனுடனும் தீர்க்க இயலும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தின்படி, ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தின் (Ontario Human Rights Commission) பங்குப்பணியானது மனித உரிமைகள் பற்றிய பொதுக்கல்வி, முன்னேற்றம், பொதுமக்கள் குரல், ஆய்வு மற்றும் கண்காணிப்பு, ஒன்டாரியோவில் இனவாதம் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு உள்ள தடைகள் உள்ளிட்ட அமைப்புரீதியான பாகுபாடுகளை நீக்குவது போன்ற பிரச்சினைகளில் சுயமுனைப்பான நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துவதாக இருக்கும். புகார்களுக்கான புதிய நடைமுறை ஒன்று செயலாக்கப்படும்; எனவே தனிப்பட்ட கோரிக்கைகளை ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் (Human Rights Tribunal of Ontario) நேரடியாக முறையிடலாம். தீர்ப்பாயத்திடம் நிவாரணம் கோரும் மக்களுக்கு ஆதரவும் அதிகாரமும் கிடைக்கும் வகையில் சட்ட மற்றும் ஆலோசனைச் சேவைகள் ஏற்படுத்தப்படும்.

சட்ட வரைவுக்கு முன்வைக்கப்படும் முக்கியத் திருத்தங்கள், இப்போது உள்ள சட்ட ஆதரவுகளை பலவாக விரிவுபடுத்தும், ஆணையத்தின் சுயேச்சைத் தன்மையை மேம்படுத்தும், அதன் புலனாய்வு மற்றும் பொதுநல அதிகாரங்களை வலுப்படுத்தும், தீர்ப்பாய நடைமுறைகளில் நியாயப்பாங்கினை மேலும் வளர்க்கும்.

**சட்ட ஆதரவுச் சேவைகளை பலவாக விரிவுபடுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் இவையும் அடங்கும்:**

- மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம் (Human Rights Legal Support Centre) ஒன்றை சட்டத்தின் மூலம் நிறைவேற்றுதல்
- தகவல், ஆலோசனை, உதவி, வழக்காடும் பிரதிநிதித்துவம் போன்ற பல வகையான சட்ட ஆதரவுச் சேவைகள் வழங்கப்படும் என்பதை தெளிவுபடுத்துவது மற்றும் உறுதி செய்வது
- மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையத்துக்கு பொதுமக்கள் நிதி அளிக்கலாம் என்பதை உறுதிப்படுத்துவது

- இந்தச் சேவைகள் மாகாணமெங்கும், எங்கெல்லாம் தேவையோ, அங்கெல்லாம் கிடைக்கச் செய்வது
- தீர்ப்பாயத்திடம் நிவாரணம் கோருகிற, கோரி வருகிற அல்லது விண்ணப்பம் செய்யக்கூடிய நபர் எவராக இருப்பினும் அவர் சேவைகள் பெறுவதற்கு உரிமை உடையவராக ஆக்குவது.

**ஆணையத்தின் சுதந்திரத்தை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் இவையும் அடங்கும்:**

- சட்டத்தின் மூலம், ஆணையம் நேரடியாக மக்களுக்கு விளக்கமளிக்கக் கூடியதாக ஆக்குவது
- முதன்முறையாக நியமிக்கப்படும் ஆணையர்கள் மனித உரிமைகள் துறையில் வல்லுநர்களாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வது
- ஆணையம் சுதந்திரமாகவும், பொது நல நோக்கோடும் செயல்படும், தனது செயல்பாடுகள் எதைப்பற்றியும் சுயமாக முடிவு செய்யும் என்பதை தெளிவுபடுத்துவது.

**ஆணையத்தின் புலனாய்வு மற்றும் பொதுநல நோக்கு அதிகாரங்களை வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களில் இவையும் அடங்கும்:**

- எந்தவொரு பிரச்சினையைப் பற்றியும் விசாரிக்க, ஆவணங்களைப் பரிசோதிக்க, நபர்களை விசாரிக்க, தனது விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று வற்புறுத்த ஆணையத்துக்கு அதிகாரங்கள் உண்டு என்பதை தெளிவுபடுத்துவது
- தீர்ப்பாயத்தின் முன் உள்ள எந்தவொரு விண்ணப்பத்தின்மீதும் ஆணையம் தலையிட உரிமை உண்டு என்பதைத் தெளிவுபடுத்துவது
- தற்போது உள்ள புகார்களை தற்போது உள்ள அமைப்பின்கீழேயே தீர்ப்பதற்கு அனுமதிக்கும் வகையில் மாற்றக்கட்ட வகையுரைகளை சரி செய்வது.

**ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தில் நியாயப்பாங்கை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுளள திருத்தங்களில் இவையும் அடங்கும்:**

- தீர்ப்பாயத்தின் முன் உள்ள பிரச்சினைகளை அவற்றின் தகுதிக்கேற்ற விதத்தில் நியாயமாகவும், விரைவாகவும் தீர்ப்பதற்கேற்ற வகையில் தீர்ப்பாயத்தின் செயல்பாடுகள் மற்றும் நடைமுறை விதிகள் இருக்குமாறு செய்வது
- தீர்ப்பாயத்திற்கு வரும் விண்ணப்பங்கள் அனைத்தும் உரிய நேரத்திலும், அதன் அதிகார எல்லைக்கு உட்பட்டதாகவும் இருப்பதை உறுதி செய்வது; சம்பந்தப்பட்ட தரப்புகள் தமது வாதங்களை வாய்மொழியாகத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்காமல் வழக்கில் இறுதி முடிவு செய்யாதிருப்பது
- விசாரணை இல்லாமலே விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்வதற்கான தீர்ப்பாயத்தின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவது
- கட்டணங்கள் விதிக்கவும் வசூலிக்கவும் தீர்ப்பாயத்துக்கு உள்ள வசதியை நீக்குவது
- ஒரு கோரிக்கை மனு முறையீட்டுக்கான காலவரம்பு ஆறு மாதங்கள் என்று இருப்பதை ஓராண்டாக நீட்டிப்பது

- தீர்ப்பாயத்தில் முடிவு செய்பவர்கள் மனித உரிமைகளில் வல்லுநர்களாக இருப்பதை உறுதிப்படுத்துவது.

சட்ட வரைவு 107க்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தங்களைப் பற்றி விவரிக்கும் வரைபடம் வேண்டுவோருக்கு வழங்கப்படும்.

உத்தேசிக்கப்ட்டுள்ள மனித உரிமைகள் சட்டத் திருத்தச் சட்டம் 2006, இரண்டாவது முறையாக 2006 ஜூன் 6ஆம் நாள் வாசிக்கப்பட்டது; தற்போது நீதிக் கொள்கையின் நிலையாணைக் குழுவின் (Standing Committee on Justice Policy) முன்பு இருக்கிறது.

- 30 -

தொடர்புகள்:
பிரெண்டன் கிராலி (Brendan Crawley)
அட்டர்னி ஜெனரல் அமைச்சகம்
தொடர்புப் பிரிவு (Communications Branch)
*(416) 326-2210*

www.attorneygeneral.jus.gov.on.ca

பொதுவான தொலைபேசி விசாரணைகள்: 416-326-2220 or 1-800-518-7901

பார்வைத்திறன் இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண்களை அழைத்து, இந்த ஆவணத்தின் உரையைக் கேட்கலாம்.

TTY: 416-326-4012

இந்த ஆவணம் 14 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படுகிறது
இதன் மொழியாக்கம் விரைவில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca